### நாளை – முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

## ஆதிதிராவிடர் நலக்குழுவின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

ஆதிதிராவிடர் நலக்குழுவினருக்கு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக்கதை வசன கர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொது வாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று பல பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளான ஆகஸ்ட் 7, வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள “அமைதிப் பேரணி” யில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள், மற்றும் அனைத்து மாவட்டத்திலுள்ள அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களும் மற்றும் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழக ஆட்சி நடைபெற்ற போதெல்லாம், நம் சமுதாய மக்கள் கோரிக்கை வைக்காமலேயே ஆதிதிராவிடர் மக்களுக்காக பல் வேறு நலத்திட்டங்களை அறிவித்து என்றும் ஆதிதிராவிடர் மனதில் நீங்கா இடம் பெற்ற ஆதிதிராவிடர் சமுதாயத்தின் விடிவெள்ளி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவரது நினைவு நாளான ஆகஸ்ட்-7 அன்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆதிதிராவிடர் நலக்குழு மாநில மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் தத்தமது பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து, மலர்மாலை சூட்டி அவரது நினைவை போற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆகஸ்ட்–7 முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்!

# சென்னை வடக்கு மாவட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மரியாதை - நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வேண்டுகோள்!



சென்னை, ஆக.6-

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வருகின்ற 07.08.2026 வெள்ளிக்கிழமை அன்று சென்னை வடக்கு மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் அவரது திருவுருவப்ப டத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழகத்தில் ஐந்து முறை முதலமைச்சராக இருந்த தமிழகத்தின் வளர்ச்சிக்கு உழைத்த நவீன சிற்பி முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர்,இராயபுரம் மற்றும் ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவீர். மேலும் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை சிறப்பு செய்திடுவோம்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்றஉறுப்பினர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழுஉறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் -அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் - வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மண்ணின் மைந்தர் கலைஞர் நினைவுநாளில் அமைதி ஊர்வலம் நடத்தியும்

# நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மகத்தான தலைவருக்கு புகழஞ்சலி செலுத்துவோம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அறிக்கை!



திருவாரூர், ஆக.6.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 வது நினைவு நாளை முன்னிட்டு, ஆகஸ்ட் 7 அன்று அந்த மகத்தான மாமனிதருக்கு அமைதி ஊர்வலம் நடத்தியும் , அவரது திருவத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தும் , நலத்திட்ட உதவிகளை வழங்கியும் புகழஞ்சலி செலுத்திட மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவானன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

உலகமெலாம் வாழும் தமிழர்களின் ஒட்டுமொத்த உயர்வுக்காகவும், தமிழ்நாட்டின் புகழுக்கு முழு முதல் காரணமாகவும் இருந்து, தமிழ்மொழி செம்மொழியாக பட்டொளி வீசி பாறந்திடச்செய்த, உலகம் போற்றும் உத்தராம் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 வது நினைவு நாளை முன்னிட்டு , தமிழ் கூறும் நல் உலகிற்கு கலைஞர் அவர்களை தந்த மாவட்டமாம் திருவாரூர் முழுவதும், ஆகஸ்ட் 7 அன்று அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் வார்டு ,கிளை கழகங்களில் முத்தமிழ் அறிஞரின் நினைவை போற்றும் அமைதி ஊர்வலமும், ஏழை எளிய மக்களின் வாழ்வின் ஏற்றத்திற்காக வாழ்நாள் முழுவதும் போராடிய அந்த உத்தம தலைவரின் நினைவாக ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அந்த மகத்தான மாமனிதருக்கு புகழஞ்சலி செலுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா ஆகியோரின் பல்கலைகழக்கங்களில் கொள்கைப்பாடம் படித்து, நவீன தமிழ்நாட்டை வடிவமைத்த சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இந்த நினைவு நாளில், தற்போது தமிழ்நாட்டின் சாபமாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஜனநாயக விரோத ஆட்சியின் முகத்திரையைமக்கள் மன்றத்தில் கிழித்து, விரைவில் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் தலைமையில் பொற்கால ஆட்சி அமைய அனைவரும் சபதம் ஏற்போம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதினைக் கண்டித்து

# திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் சாலை மறியல் - கைது!

## பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் கழகத்தினர் கண்டன முழக்கம்!

சென்னை, ஆக. 6-

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான “இளந்தலைவர் “உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் ஓட்டேரி பாலத்தில் பகுதி கழக செயலாளர் செ. தமிழ்வேந்தன் தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்று நூற்றுக்கணக்கான கழக தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் மேயர் பிரியா ராஜன், பெரம்பூர் ராஜன் புவனவதி, க.எழிலன் வட்டகழக செயலாளர்கள் பரிமளா சுரேஷ் மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா

எம்.இசட். அபோய், எஸ், புஷ்பராஜ், ஜி. கிருஷ்ண குமார், மு.சரவணன், எம் நிறைமொழி எஸ்.சரத்குமார் ஆர் கார்த்திக், பி.ஏ.காமேஷ், எஸ்.பி.கோதண்டமூர்த்தி, கே.ராஜீ, எஸ்.கவிதா, வி. சாந்தா, பி.பாப்பு, கே.காயத்ரி, மகாதேவன், மோகன், சிவகுரு, தீபா, சாந்தா, லதா, வனிதா, சிவகுமார், அஸ்வினி, குப்புசாமி, செண்பகவள்ளி, ஜெயலஷ்மி, சாந்தி தமிழ்செல்வி, சாய், பி.ஜெகதீஷ், பி.எஸ்.வள்ளல், வசந்த், பாஷ்யம் மோகன் ராஜ், பிரபாகரன், பிரியா, மகேஷ்வரி, சந்தானராஜ், பிரித்தி, ஜோஸ்வா, பண்ணீர் செல்வம், மின்னல்ராஜ், மகேஷ் குமார், வினோத், பெரோஸ் கான், வேளாங்கன்னி, மனோஜ்குமார், திருகுமரன் லோகேஷ், காஞ்சனா, வைலட், கோமதி, நான்சி, வர்ஷா, ஆர்த்தி, தீபா, மகேஷ்வரி, பிரபு, சாமுவேல், சங்கர், ஜெபராஜ் மற்றும் நூற்றுகணக்கான கழகதோழர்களும் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




# பட்ஜெட்டில் ஹஜ் மானியம் - முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் கண்துடைப்பு நாடகம்

தமிழ்நாடு அரசின் 2026-27 இடைக்கால பட்ஜெட்டில் ஹஜ் மானியத்தை ரூ.25,000-லிருந்து ரூ.35,000-ஆக உயர்த்தியிருப்பதாக அறிவித்து, இதை “முஸ்லிம்களுக்கான மாபெரும் சலுகை” என விஜய் அரசு கட்டமைத்து வருகிறது

உண்மை நிலை என்ன?

1. **செலவு vs மானியம்:** ஒரு முஸ்லிம் அரசு கோட்டா மூலம் ஹஜ் செல்ல ஆகும் செலவு சுமார் ரூ.4,00,000. தனியார் மூலம் ரூ.8,00,000 முதல் ரூ.9,00,000 வரை. இந்த நிலையில் ரூ.35,000 மானியம் என்பது மொத்த செலவில் 8% கூட இல்லை. இது தெளிவான கண்துடைப்பு.
2. **யாருக்கு பயன்?:** இந்த மானியம் தமிழ்நாடு அரசு ஹஜ் கமிட்டி மூலம் செல்லும் சில நூறு பேருக்கு மட்டுமே. தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் செல்லும் 60%க்கும் மேற்பட்டோருக்கு இந்த மானியம் கிடைக்காது.
3. **இது மானியமே இல்லை:** மத்திய அரசு 2018-லேயே ஹஜ் மானியத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டது. இப்போது வழங்கப்படுவது விமான கட்டணத்தை உயர்திவிட்டு, அதிலிருந்து ஒரு சிறு தொகையை திருப்பி தருவதே ஆகும்.
4. **சமூகத்தின் கோரிக்கை இல்லை:** ஹஜ் என்பது “இஸ்திதாஅத்” - பொருளாதார தகுதி உள்ளவர்களுக்கான இஸ்லாமிய கடமை. “எங்களுக்கு மானியம் தாருங்கள்” என்று முஸ்லிம் சமூகம் ஒருபோதும் கேட்டதில்லை. இந்த மானியத்தை நம்பி யாரும் ஹஜ் பயணம் மேற்கொள்வதில்லை.

எங்களது கேள்வி:

முழு பட்ஜெட்டிலும் முஸ்லிம் சமூகத்திற்கு ஹஜ் மானியம் தவிர வேறு என்ன சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது?

வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, வக்ஃப் சொத்து பாதுகாப்பு, சிறுபான்மை நலத்துறை நிதி - இவை எதிலும் குறிப்பிடத்தக்க அறிவிப்பு இல்லை.

ஆனால் ரூ.10,000 மட்டும் உயர்த்தி கொடுத்துவிட்டு “முஸ்லிம்களுக்கு மட்டும் சலுகை” என பாசிச சக்திகள் கதறவும், “நாங்கள் பெரிய சலுகை தந்தோம்” என அரசு விளம்பரம் செய்யவும் மட்டும் இந்த அறிவிப்பு பயன்படுகிறது.

எனவே நடிகர் விஜய் அரசு இந்த கண்துடைப்பு மானிய நாடகத்தை கைவிட்டுவிட்டு, முஸ்லிம் சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளான கல்வி, வேலைவாய்ப்பு, வக்ஃப் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.



சைதை சாதிக்
(கழக செய்தி தொடர்பாளர்)

### தொலைதூர ரயில்களில் வழங்கப்படும்

# உணவின் தரம் - சுகாதாரம் மேம்படுத்தப்படுமா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 6 –

தொலைதூர ரயில்களில் வழங்கும் உணவின் தரம் மேம்படுத்தப்பட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு

அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குச் சேவை வழங்கும் தொலைதூர ரயில்களில் வழங்கப்படும் தரம், சுகாதாரம் மற்றும் உணவுச் சேவைகள் குறித்து அரசு ஏதேனும் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதா, அப்படியெனில் அதன் விவரங்களை ஆண்டு வாரியாகத் தெரிவிக்கவும்;

(ஆ) மேற்கூறிய மாநிலத்திலிருந்து புறப்படும் அல்லது இந்த மாநிலத்தின் வழியே கடந்து செல்லும் ரயில்களில், அடிப்படை சமையலறைகளை (Base Kitchens) நவீனப்படுத்தவும், தரக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும், தொழில்நுட்பம் சார்ந்த கண்காணிப்பை அறிமுகப்படுத்தவும் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும் அரசால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

(இ) தெற்கு இரயில்வே மண்டலத்தில் இயக்கப்படும் தொலைதூர ரயில்களில் சுகாதாரமான, சத்தான மற்றும் பாரம்பரிய தென்னிந்திய உணவு வகைகளின் கிடைப்புத் தன்மையை விரிவுபடுத்த அரசு முன்மொழிகிறதா, அப்படியெனில் அதன் விவரங்கள் யாவை;

(ஈ) ரயிலுக்குள் வழங்கப்படும் உணவுச் சேவைகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பயணிகளின் கருத்துப் பெறும் வழிமுறைகள் மற்றும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

(உ) மேற்கூறிய மாநிலத்தில் தொலைதூர ரயில்களில் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பான, உயர்தரமான மற்றும் மலிவு விலையிலான உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக முன்மொழியப்பட்ட அல்லது முன்மொழியப்பட உள்ள அடுத்தடுத்த நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ரயில்வே இணை அமைச்சர் விரிவாகப் பதிலளித்தார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி!

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின்படி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 7.8.2026 காலை 8 மணிக்கு ஒமந்தூரார் வளாகத்தில் அண்ணா சாலையில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் நினைவிடம் வரை அமைதி பேரணியில் கலந்து கொள்ள வேண்டும்.

பகுதி அலுவலகத்தில் படத்திற்கு மரியாதை!

அதனை தொடர்ந்து சென்னை வடகிழக்கு மாவட்டம்திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க.சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அவர்களின் ஏற்பாட்டில் 7.8.2026 காலை 11 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் 1000 பேருக்கு மதிய உணவு வழங்குகிறார் ஆகையால் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

# தி.மு.க...

அதிகாரம்
இல்லாவிட்டால்
என்ன

"அதிக காரம்" உள்ள
சுயமரியாதை
இயக்கம்
தி.மு.க. என்பதை


உதயநிதி
மீதான கைது
முயற்சியாலும்

சென்னைக்கும் செங்கிப்பட்டிக்குமான
காவல்துறை பாதுகாப்போடு
இணைந்த அணிவகுப்பாலும்

தொண்டர்களின் பேரெழுச்சியாலும்
உலகுக்கே எடுத்துக் காட்டியிருக்கிறது
மதிகெட்ட
மக்குத் த.வெ.க...



என்னநாஞ்
சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்